

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 05.01.2026


# செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டிய முதலமைச்சர்!

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகாலக் கோரிக்கை அது. 'அதை வழங்க முடியாது' என்று பலராலும் கருத்துச் சொல்லப்பட்டு வந்தது. 'இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு ஊழியர்களின் நம்பிக்கையை தி.மு.க. அரசால் பெற முடியவில்லை' என்றும் எதிர்க்கட்சிகள் மனதுக்குள் சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் குடும்பங்களின் உள்ளம் குளிரும் வகையில் மகிழ்ச்சியான, நிறைவான, வாழ்நாள் முழுவதும் மனம் மகிழும் அளவிலான அறிவிப்பைச் செய்து, யாராலும் செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இருபது ஆண்டுகளாக தலைமைச் செயலகம் பார்க்காத காட்சியை நேற்றைய தினம் தலைமைச் செயலகம் கண்டது. முதலமைச்சர் அறைக்கு வந்த அரசு ஊழியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடிக் கொண்டார்கள்.

உறுதி அளிக்கப்பட்ட வாக்குறுதியை 'உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாக' அறிவித்து விட்டார் உறுதிமிக்க முதலமைச்சர் அவர்கள்.

'கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிதிநிலைமை சீரானதும் நிறைவேற்றுவோம்' என்றார் முதலமைச்சர். அதனைச் செய்து காட்டி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.

- **மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.**
- **ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.**
- **அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.**
- **ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.**

இவ்வாறு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அரசு ஓய்வூதியம் என்பது அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுக்குப் பிறகும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய சமூக பாதுகாப்பு என்பதை உறுதி செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஏற்பதன் மூலம் ஓய்வூதியப் பங்களிப்புக்கு செலுத்த வேண்டிய கூடுதல் பங்களிப்பு தொகையாக ரூ.13 ஆயிரம் கோடியும், பணியாளர்கள், ஆசிரியர்கள் நலனுக்காக அரசுப் பங்களிப்பாக ரூ.11 ஆயிரம் கோடியும் ஆக ரூ.24 ஆயிரம் கோடி நிதிச்சுமையை தமிழ்நாடு ஏற்றிருப்பதும், ஓய்வூதியர் மறைவுக்கு பிறகு குடும்ப ஓய்வூதியமாக 60 சதவீதம் வழங்கு முன்வந்திருப்பதும், நாட்டுக்கு முன்னுதாரணமாக அமையும்.

"எங்கள் ஓய்வு கால வாழ்க்கை அர்த்தமுள்ளதாக முதலமைச்சர் மாற்றி உள்ளார். இன்றைய அறிவிப்பின் மூலம் 6.5 லட்சம் பேர் வாழ்க்கையில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்திருக்கிறார்" என்று அரசு ஊழியர் சங்கத்தினர் சொல்லி இருக்கிறார்கள்.

புதிய திட்டமாக 'தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்' (Taps) என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முன்பு இருந்து வந்த பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்கள் மீண்டும் கிடைக்கும் வகையில் இத்திட்டம் இருக்கிறது.

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக் காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சரின் கருணையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

ஒன்றிய அரசு தந்து வருகின்ற கடுமையான நிதி நெருக்கடிகளுக்கும், நிதிச் சுமைகளுக்கும் மத்தியிலும், "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறிவித்து விட்டார் முதலமைச்சர். அது தான் மிகமிக முக்கியமானது ஆகும்.

ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்று சிறப்புமிக்க அறிவிப்பை முதல்வர் வழங்கி இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபடி இருந்தார்கள். இதன் தொடர்ச்சியாக "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" செயல்படுத்திக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**"முத்தமிழறிஞர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எவ்வாறு காவலராக திகழ்ந்தாரோ அதேபோன்றுதான் நமது முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் இருந்து வருகிறார். நாங்கள் நம்பி வந்ததை நிறைவேற்றி இருக்கிறார் முதலமைச்சர்" என்று சொல்லி இருக்கிறார்கள் அரசு ஊழியர் சங்கத்தினர்.**

"நிதிநிலைமை சீரடைய சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலேயே நிறைவேறும்" என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**2003 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களை பாடாய் படுத்தினார் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா. பழனிசாமியும் தன் பங்குக்கு கொச்சைப்படுத்தினார். அரசு ஊழியர்கள் வாங்கும் சம்பளத்தை விளம்பரமாகப் போட்டு எரிச்சல் உண்டாக்கினார். இதனால் காயம் பட்ட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் இதயத்தில் பால் வார்த்துவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

## இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி –

# வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு கோரிக்கை ஏற்பு! அரசாணை வெளியீடு!

நெல்லை, ஜன் 5 –

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு, பேரவைத் தலைவரும், இராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்பாவு அவர்களின் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, சட்டமன்றத்தில் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திறப்பதற்கான அரசாணை அறிவிப்பினை தற்போது வெளியிட்டுள்ளார்கள். அதுபோல், பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திசையன் விளையிலும், Cum-court திறப்பதற்கு ஏற்கெனவே அரசாணை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நீதிமன்றங்களையும் திறப்பதற்கு அரசாணை அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, மிக விரைவிலேயே இரண்டு நீதி மன்றங்களும் திறக்கப்படும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## வருகிற 7ஆம் தேதி உத்தங்குடியில்

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஜன. 5–

மதுரை உத்தங்குடியில் வருகிற 7ஆம் தேதி வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக இதில் கழகத்தினர் பெரும் திரளாக பங்கேற்க வேண்டுமென மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம்:

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற பொங்கல் திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் நடைபெற உள்ள தமிழர்களின் பாரம்பரியமிக்க ஜல்லிகட்டு விளையாட்டு போட்டிகளை துவக்கி வைக்க மதுரை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளனர்.

அதுசமயம் இருவருக்கும் வரலாறு காணாத வகையில் உற்சாக வரவேற்பு கொடுப்பது மற்றும் விழாவினை சிறப்பிப்பது உள்



ளிட்ட பணிகள் தொடர்பாகவும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் 07.01.2026 புதன்கிழமை மாலை 5 மணிக்கு மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜே எஃப்ஏ லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது

இக்கூட்டத்தில் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொது உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று கூட்டத்தை சிறப்பிக்க வேண்டும் என வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஜன.7இல் வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

திண்டுக்கல்இ ஜன. 5 –

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயாளர் – அமைச்சர் அர.சக்கரபாணிஇ கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில் குமார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெறவுள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.01.2026, புதன்கிழமை அன்று வருகை தரவுள்ளார்கள்.

தமிழக முதல்வர் அவர்களுக்கு 07.01.2026, புதன்கிழமை காலை 8.00 மணியளவில் பாண்டியராஜபுரத்தில் நிலக்கோட்டை வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியங்கள், அம்மையநாயக்கனூர் பேரூர்





மற்றும் நிலக்கோட்டை பேரூர் கழகம் சார்பிலும் கொடைரோடு, டோல்கேட் பகுதியில் வத்தலக்குண்டு வடக்கு, தெற்கு, கிழக்கு ஒன்றியங்கள், வத்தலக்குண்டு பேரூர், சேவுகம்பட்டி பேரூர் மற்றும் பட்டிவீரன்பட்டி பேரூர் கழகம் சார்பிலும் காந்திகிராமம், சரவண பவன் ஹோட்டல் அருகில் ஆத்தூர் கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றியங்கள், சின்னாளபட்டி பேரூர், அய்யம்பாளையம் பேரூர் மற்றும் சித்தையன்கோட்டை பேரூர் கழகம் சார்பிலும் திண்டுக்கல், மதுரை ரோடு, தோமையார்புரத்தில் பழனி நகரம், கொடைக்கானல் நகரம், பழனி கிழக்கு, மேற்கு, வடக்கு ஒன்றியங்கள், கொடைக்கானல் மேல்மலை, மத்தியம், கீழ்மலை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், பண்ணைக்காடு பேரூர், ஆயக்குடி பேரூர், நெய்க்காரப்பட்டி பேரூர், பாலசமுத்திரம் பேரூர் நத்தம் வடக்கு, தெற்கு, மத்தியம், சாணார்பட்டி வடக்கு, தெற்கு, மத்தியம், நத்தம் பேரூர், திண்டுக்கல் வடக்கு மற்றும் கிழக்கு, தெற்கு ஒன்றியங்கள் சார்பிலும், திண்டுக்கல், அஞ்சலி ரவுண்டானாவில் ஒட்டன்சத்திரம் வடக்கு, மத்தியம், மேற்கு ஒன்றியங்கள், ஒட்டன்சத்திரம் நகரம், தொப்பம்பட்டி வடக்கு, மத்தியம், மேற்கு ஒன்றியங்கள், கீரனூர் பேரூர், வேடசந்தூர் வடக்கு, தெற்கு வடமதுரை கிழக்கு, மேற்கு, குஜிலியம்பாறை வடக்கு, தெற்கு ஒன்றியங்கள், வேடசந்தூர் பேரூர், வடமதுரை பேரூர், எரியோடு பேரூர், அய்யலூர் பேரூர், திண்டுக்கல் மாநகரம், ரெட்டியார்சத்திரம் வடக்கு, தெற்கு, மேற்கு ஒன்றியங்கள், கன்னிவாடி பேரூர், ஸ்ரீராமபுரம் பேரூர், அகரம் பேரூர் மற்றும் தாடிக்கொம்பு பேரூர் சார்பிலும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற முன்னாள், இன்னாள் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள என அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு முதல் அமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்து சிறப்பித்திடுமாறு; கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில் குமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்.

## மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்துகின்ற

# 'சான்றோர் பெருவிழா: இலக்கிய விழா நிகழ்ச்சி!

## தமிழ் ஆர்வலர்களுக்கு முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அழைப்பு!

சென்னை, ஜன.5–

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் நடத்துகின்ற 'சான்றோர் பெருவிழா' எனும் இலக்கியவிழா நிகழ்ச்சி ஜனவரித் திங்கள் 5, 6 ஆகிய இரண்டு நாள்கள் முற்பகல் 10.00 மணிக்கு உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்டவளாகத் திருவள்ளுவர் கலை அரங்கில் நடைபெறவுள்ளன என்று உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநரும், துணைத் தலைவருமான முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அறிவித்துள்ளார்.

முதல் நாள் நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையுரை ஆற்றவுள்ளார். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலஅடிகளார் அவர்கள் சான்றோர் உரையாற்றிச் சிறப்பிக்கவுள் ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன்குமார் தொடக்கவுரை ஆற்றவுள்ளார். இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்க



இயக்குநர் மற்றும் துணைத்தலைவர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள் வரவேற்புரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் முற்பகல் 11.30 மணிக்கு 'இன்றைய வாழ்க்கை பூந்தோட்டமா? போராட்டமா?' என்ற தலைப்பில் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் தலைமையில் பட்டிமண்டபம் நடைபெறவுள்ளது. பூந்தோட்டமே என்ற தலைப்பில் கவிஞர் அபுதாபி பாஸ்கர், நகைச்சுவை நாவலர் க.சிவகுருநாதன், முனைவர் சா.நீலகண்டன் ஆகியோரும் போராட்டமே என்ற தலைப்பில் முனைவர் சிவ.சதீஸ்குமார், சிந்தனைச் செல்வர் தாமல் சரவணன், இசைக்குயில் திருமதி மலர்விழி ஆகியோர் வாதிடவுள்ளனர்.

இதனையடுத்து பிற்பகல் 2.00 மணிக்கு தமிழர் வாழ்வும் தமிழ்ப் பணிகளும் என்ற தலைப்பில் 'சான்றோர் முற்றம்' என்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் முனைவர் ஔவை.ந.அருள் அவர்கள் தலைமையேற்க சங்க இலக்கியம் காட்டும் தமிழர் பண்பாடு என்ற தலைப்பில் முனைவர் சரஸ்வதி ராமநாதன் அவர்களும் சித்தர்களின் வாழ்வும் தமிழ்ப் பணிகளும் என்ற தலைப்பில் முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே அவர்களும் உரையாற்றிச் சிறப்பிக்க வுள்ளனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு இயல், இசை. நாடகமன்றத்தின் சார்பில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. பிற்பகல் 6.00 மணிக்கு 'தமிழ் ஓசை' என்ற தலைப்பில் திரைப்பட இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் தலைமையிலான குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இரவு 7.30 மணிக்கு கலைமாமணி எம்.பி.விஸ்வநாதன் குழுவினரின் 'மதுரைவீரன்' நாடகம் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் 'தமிழ்ச் சங்கங்களின் சவால்களும் தீர்வுகளும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. கருத்தரங்க அமர்வில் அமெரிக்காவின் பாரதி கலைமன்றத்தின் தலைவர் கணேஷ் ரகு அவர்கள் தலைமையேற்க அவரின் கீழ் ஹாங்காங் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் முனைவர் மெய்.சித்ரா அவர்களும் கரூர் உலகத் தமிழ்க்காப்புக் கூட்டியக்கத்தின் தலைவர் முனைவர் சி.சுப்பிரமணியன் அவர்களும் கர்நாடகம் அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் செ.துரைசாமி அவர்களும் கேரளா திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு. முத்துராமன் அவர்களும் மதுரை புரட்சிப் பாவலர் மன்றத்தின் தலைவர் பி.வரதராஜன் அவர்களும் உரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளனர்.

நிறைவு விழா நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள் சிறப்புரையாற்றவுள்ளார். தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப் பாண்டியன் அவர்கள் நிறைவுப் பேருரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு அயலகத் தமிழ் அமைப்புகள், வெளி மாநிலத் தமிழ் அமைப்புகள் தமிழகத் தமிழ் அமைப்புகள், உள்ளூர்த் தமிழ் அமைப்புகள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்ட அமைப்புகளிலிருந்து சான்றோர் பெருமக்கள்; கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே இந்நிகழ்ச்சியில் மதுரையைச் சார்ந்த தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநரும் துணைத்தலை வருமான முனைவர் இ. சா.பர்வீன் சுல்தானா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்!

# முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்!

## திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தேன்மொழி பொன். முத்து ராமலிங்கம் அறிக்கை!

சென்னை, ஜன.5–

"தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டம் முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்" என்று திராவிடக் கருத்தியல் ஆசிரியர் மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தேன்மொழி பொன். முத்துராமலிங்கம் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் பெரும்பங்காற்றிவரும் அரசு ஊழியர்கள், வருங்காலத் தமிழகத்திற்கு வளமான தலைமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் கால் நூற்றாண்டுக் கனவான ஓய்வூதியத்தை அறிவித்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உள்ளங்களில் வரும் பொங்கலுக்கு முன்பே மகிழ்ச்சியை வரவழைத்துள்ளார் போற்றுதலுக்குரிய தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வழித்தடத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு எப்பொழுதும் செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு என்பதை மீண்டும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஒவ்வொரு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வருங்காலத்தில் சுயமரியாதையோடு இச்சமூகத்தில் வாழ்வதற்கு ஆகச்சிறந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் திரா விடத்தின் முக்கிய மூன்று முத்தான கொள்கை அடித்தளங்களான "பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதை ஆகியவை இச்சமுகத்தின் ஆணிவேராக இருக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடுதான் முதலமைச்சரின் போற்றுதலுக்குரிய அறிவிப்பாகும்.

திராவிட மாடல் அரசு உறுதியளித்துள்ள இந்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் தொடர்புடைய ஒவ்வொருவரின் வாழ்விலும் தன்னம்பிக்கை, சுயமரியாதை, மகிழ்ச்சி ஆகிய இனிய சூழலை உருவாக்கியுள்ளது என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரி



யர்களின் எதிர்கால வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான சூழலை இந்த அறிவிப்பின் மூலம் உருவாக்கிதந்த தமிழ்நாடு அரசின் போற்றுதலுக்குரிய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.